


KSR COLLEGE OF ARTS AND SCIENCE
I N D I A
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 97
மே 2017




## உழைப்பாளர் தினம்

# விடியல்
The Dawn

இதழ்-97, மே - 2017



**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் சி.ரா. சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**
**திரு. மு.சதீஸ்குமார்**

**ஆசிரியர் குழு**

திரு .வீரா.முருகானந்தம்
முனைவர் த.கண்ணன்
திருமதி. சு.சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து.சரஸ்வதி
முனைவர் பா.ராஜேஷ்
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ம.லோகேஷ்வரன்
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
முனைவர் ப.பிரதீபா
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்


## தலையங்கம்
## தொழிலாளர் தினம்

மே தினம் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினம். போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்திய தினம்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மே முதல் நாள் என்றாலே விடுமுறைதான். இதனை மே தினம் என்றும் தொழிலாளர் தினம் என்றும் கூறக் கேட்டிருப்பீர்கள்.

இந்த மே தினம் வந்தது எப்படி? உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் மே முதல் தேதியை மே தினம் என்றும் தொழிலாளர் தினம் என்றும் கொண்டாடி மகிழ்கிறார்கள். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி நேரம் வரை வேலை


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இதற்கு எதிரான குரல்கள் பல்வேறு நாடுகளில், ஆங்காங்கே எழத் தொடங்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (Chartists). சாசன இயக்கம் 6 முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை என்ற கோரிக்கை. 1830 ஆம் ஆண்டு, பிரான்சில் நெசவுத் தொழிலாளர்கள் தினமும் 15 மணி நேரம் உழைத்து வந்தனர். இதனை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னில் கட்டிடத் தொழிலாளர்கள் 1856 இல் முதன்முதலாக 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர். 1889 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேசத் தொழிலாளர் பாராளுமன்றம் கூடியது. 18 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். காரல்மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்று முடிவு செய்தனர்.

1890 மே 1 ஆம் நாள், அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்த அறைகூவலே, மே முதல் நாள் சர்வதேசத் தொழிலாளர் தினமாக, மே தினமாக வருவதற்குக் காரணமாக அமைந்தது. அடுத்த ஆண்டிலிருந்து உலக நாடுகள் பலவற்றில் விடுமுறையும் அறிவிக்கப்பட்டது. உலகத் தொழிலாளர்களின் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக்கட்டி தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்துவிதமான துன்பங்களும் தீரும் என்றும், முதலாளிகள் உலக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும், இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை தொழிலாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி

இதையெல்லாம் செய்வதற்கு, "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்றும் கூறினார் ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் காரல்மார்க்ஸ். இவ்வாறு அவர் கூறி 42 ஆண்டுகள், உலகெங்கும் உள்ள தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தால் இந்த வெற்றி நிலைநாட்டப்பட்டது.

இந்தியாவில் முதலாளிகளின் சுரண்டலை எதிர்த்து, தங்கள் உரிமையை அடைவதற்கான போராட்டம் இன்று வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. தொழிலாளர்கள் சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து தொழிலாளர்கள் என்னும் உணர்வுடன் ஒன்றுபட்டுப் போராடினால் வெற்றி கிடைத்தே தீரும் என்பதை மே தின வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. இந்தியாவில் சென்னை மாநகரில்தான் முதன்முதலில் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. பொதுவுடைமைவாதியும் தலைசிறந்த சீர்திருத்தவாதியுமாகிய **ம.சிங்காரவேலர்** தான் 1923 **இல் சென்னை உயர்நீதிமன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாவைக் கொண்டாடினார்.**

உழைப்பாளத் தோழனே!

**நீ ஏர்பிடித்திருக்காவிட்டால்**
**என் பூமித்தாய்க்கு பட்டாடை ஏது...**
**என் பார்வையில்**
**தாயும் நீயும் ஒன்று தான்**
**தாய் ரத்தத்தைப் பாலாக்குகிறாள்...**
**நீயோ அதை வியர்வையாக்குகிறாய்...**
**உழைப்புக்கு ஓய்வு கொடுத்து விட்டு**
**விடியலைக் கண்டுவிட முடியாது**
**எந்த ஒரு தேசமும்..**
**எந்த ஒரு மனிதனும்...**

தொழிலாளர் நலம் வாழ, வளம் பெருக வாழ்த்துவோமாக..

**இணையாசிரியர்**

# உள்ளுறை

## தொழிலாளர் தினம்

கவிதைகள்.................................. 05 – 12

புகையிலை மறுப்பு தினம்........ 12 - 14

பெண் சுதந்திரம்.......................... 14 - 15

பொதுவான கவிதைகள்............ 16 - 20

அறிந்துக்கொள்வோம்...................21 – 22

முதியோர் இல்லம்........................23 - 24

அப்பா - கவிதை...........................26 – 29

நட்பு............................ 31 - 32

# கவிதைகள்

## தோழன்

பெண் நட்பிலும் கிடைக்காத அனுபவங்கள்

உன்னோடு...

நான் காயப்படும் போதெல்லாம் என்னை

காப்பாற்றினாய் தோழா...

எனக்குக் கோபம் வரும்போதெல்லாம்

கோரிக்கை வைத்தாய்...

நான் பயப்படும் போதெல்லாம்

உற்சாகம் ஊட்டினாய்...

உனக்குப் பிடித்த போட்டியில் நீ சேரு என்று,

என்னிடம் பேட்டி எடுத்தாய்...

நான் சோகமாக இருக்கும் போதெல்லாம்

ஏன், எதற்கு, எப்படி என

வேகமாகக் கேள்வி கேட்பாய்...

நான் தாழ்த்தப்படும் போதும் கூட

உன்னிடம் தான் தடுமாறி விழுந்தேன்.

நீயே,

தாக்கிய இதயத்திற்குத்

தாலாட்டு ஆனாய்...

தயங்கிய மனதிற்கு
தன்னம்பிக்கை ஆனாய்...

தவழ்ந்த கால்களுக்கு

தாயுமானாய்...

என் அருமை தோழா

நீ என் அருகில் இருப்பதால்

கண்ணீரும் காணாமல் போனது,

கடைசி ஜென்மம் வரை நீமட்டும்

எனக்குத் தோழனாக அமைய

ஆசைப்படுகிறேன்...

**சி.பவித்ரா**

**முதலாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## நட்பு

எவரும் என்னைவிட

அழகாக இருக்கலாம்

புத்திசாலியாகவும் இருக்கலாம்

ஆனால் உங்கள்

நட்பை உயிராய்

நேசிக்க என்னைப்போல்
யாரும் இருக்க

முடியாது

மனசும் மனசும்

பேசிக் கொண்டால்

வார்த்தை கிடையாது

முகம் பார்க்காமல்

பேசும் நட்புக்கு

பிரிவு கிடையாது

**ப.ராஜஸ்ரீ**

**முதலாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## அப்துல்கலாம்

முதல் குடிமகனாய் உயர்ந்தாய்

அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தாய்

அண்டை நாடும்

உன்னைக் கண்டு வியந்திட

தலைக்கணம் இன்றி

தலை நிமிர்ந்து நடந்தாய்

முதல் குடிமகனாய் திகழ்ந்தும்

உன் செல்லக் குழந்தைகள்

தோல்விகள் பலகண்டும்

மாணவர்களின் இதயத்தில் கடவுளாய் திகழ்ந்தாய்

உன் ஏவுகணைகள்

வானத்தை துளையிட்டது

ஆனால் உன் இறப்பு

மக்களின் இதயத்தைத்

துளையிட்டது.

இறுதி நிமிடம் வரை

உன் மக்களுக்குத்

தொண்டாய் நின்றாய்

உன் அறப்பணிக்குக்

கடவுள் கொடுத்த வெகுமதி

அய்யா...

உந்தன் மரணம்...

வானுலகை துளையிட்ட உன்னை

மேல் உலகம் துளையிட அழைத்தானோ

கடவுள்...

அவனும் உன் அறிவைக்

கண்டு வியந்தான்...

நீ மனிதனா! கடவுளா!

என்று...

உன்னைத் திருப்பி அனுப்ப

அவனுக்கு மனமில்லை, ஆனால்

உன் நினைவை மக்களின்

மனதில் பதிய வைத்தான் அவன் (கடவுள்)...

**த.தினேஸ்குமார்**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'ஆ'பிரிவு**

## வாழ்க்கை

ஆயிரம் தடவை உன் வாழ்க்கை

உன்னை அழவைத்தால்

ஆயிரம் வழிகளில் நீ

சிரிப்பதற்கு வழிதேடு

அறியாமையுடன் நூறு

ஆண்டுகள் வாழ்வதைவிட

அறிவுடன் ஒருநாள் வாழ்வது மேல்

இதுவரை நடந்ததை யோசிப்பதைவிட

இனி எப்படி நடக்க வேண்டும் என

யோசிப்பவர்களே வாழத் தெரிந்தவர்கள்

நீ கொடுக்கக்கூடிய தண்டனை

அவர்கள் கண்முன் நீ

மகிழ்வுடன் வாழ்வது மட்டுமே...

**த.தினேஸ்குமார்**
**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'ஆ'பிரிவு**

## நட்பு

உன்னிடம் யார் பெரியவர்

என்று கேட்டால்

நீ சொல்வாய்

வானம் பெரியது என்று

என்னிடம் கேட்டால்

நம் நட்பு பெரியது

என்று சொல்வேன்

ஏனென்றால் அந்த வானமே

நம் நட்பை அன்னாந்து பார்க்கும்.

**மா.சாந்தி**

**இரண்டாமாண்டு – கணிதவியல் துறை**

## அம்மா

அம்மா

மறுமுறை உந்தன் கருவறை

வேண்டும்

நான் உன் மகளாகப்

பிறக்க அல்ல

நீ என் மகளாகப் பிறக்க.

**மா.சாந்தி**

**இரண்டாமாண்டு – கணிதவியல் துறை.**

## பிரிவின் துயரங்கள்

எதையும் எதிர்பார்க்காதது

தன்னலம் என்பது

சிறிதும் இவற்றிற்குக் கிடையாது

அறிமுகப்படுத்துவது எனத்

தெரியவில்லை எனக்கு

இவற்றை அறிமுகப்படுத்துவதற்கு

இங்குள்ள சொற்கள்

போதுமானதல்ல

தன்பெற்றோர்களிடத்துச் சொல்ல
முடியாத விசயங்களையும்
சிறிதும் தயக்கமின்றி
சொல்கிறோம்
சில விஷயங்களைப் பெற்றோரிடம்
மறைப்பதற்கு இடம்தரும் மனம்
ஏனோ தன் நண்பர்களிடம் மறைப்பதற்கு,
இடம் தர மறுத்து நிற்கின்றன...
அழும்போது சாய்ந்துகொள்ள
தோள் கொடுப்போம்
வெற்றியின் போது
மேலும் உயர்வதற்கு துணையாக
இருப்போம் என உறுதியோடு
கைகோர்த்து நிற்போம்..
நாங்கள் ஒன்றுகூடி
இருந்த காலத்தில்
கண்ணீருக்கு இடம் தரவில்லை - இன்று
கல்லூரிப் படிப்பு முடித்து
பிரியப் போகும் இந்த நொடியில்,
எங்களது மனம் ஏனோ!
மவுனக் கடலில் மூழ்கி - பின்
கண்ணீர்த் துளிகளாய்
வெளிவருகின்றன...
எங்கள் பிரிவின் துயரங்கள்...
கல்லூரி வாழ்வின் வசந்தங்களை நினைத்து...

**ஆ.காயத்ரி**
**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## அகக்காதல்

எட்டும் அழகில்
ஏணிபோல்
எட்டாமல் இருக்கும்
என்னவளை முழுமையாக
ஏற்றுக்கொண்டு பாடுகிறேன் ஒரு
எட்டுத்தொகை நூலாக!!!!!

**ஜெ. டாபீன் ஜீவன்**
**முதலாமாண்டு மின்னணு மற்றும் தொடர்பியல்**

## அழகு

என்னிடம் அழகில்லை மற்றவர் என்னை
ரசிக்க.....
ஆனால்
அழகான இதயம் உண்டு மற்றவர் அதில்
வசிக்க....

**வி. இளமதி**
**முதலாமாண்டு கணினிஅறிவியல் 'ஆ' பிரிவு**

## புகையிலை மறுப்பு தினம்

மே - 31



பெருமைமிகு தமிழ்த்துறை விடியல் சொந்தங்களே! வணக்கம்.! மே மாதம் 31.5.17 உலக புகையிலை மறுப்பு தினம். உலகில்

எத்தனையோ வகை போதைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதில் புகையிலையால் வரும் கேடு மிக மோசமானது. அதுவும் புகைப்பிடிப்பவர்களால் பரவும் கேடு மிகக் கொடுமையானது. மற்ற போதைப் பொருள்களால் அவன் அழிவான். அவனால் அவன் குடும்பம் துன்பப்படும். புகைபிடிப்பவர் வெளியேற்றும் விஷப் புகையால் அவருக்குச் சம்பந்தமில்லாதவர்களெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். இந்தத் தீயப்பழக்கத்தால் புற்றுநோய் வந்து லட்சக்கணக்கில் மக்கள் செத்து மடிகிறார்கள்.

**“என்னையே தேடிவரும்**
**உனக்காக நிஜமாய்**
**என்னைக் கொடுப்பேன் - ஒரு நாள்**
**எமனுக்காக உன் உயிரையும்**
**எடுப்பேன்”** - இப்படிக்குப் புகையிலை

இந்தப் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிட்ட ஒவ்வொரு நொடிகளிலும் கிடைக்கும் நன்மையையும், உடல் ஆரோக்கியத்தையும் பாருங்கள்.

◊ 20 நிமிடங்களில் ரத்த அழுத்தமும் இதயத் துடிப்பும் இயல்பாகும்.

◊ 8 மணி நேரத்தில் ரத்தத்தில் கலந்திருக்கும் அதிகப்படியான கார்பன்டை மோனாக்சைடு வெளியேறும்; ரத்தத்தில் ஆக்சிஜன் அளவு இயல்பாகும்.

◊ 2 நாட்களில் நரம்புகள் திரும்ப வலிமைபெற ஆரம்பிக்கும். நாக்கில் சுவை மொட்டுக்கள் மீண்டும் உயிர்பெறும்.

◊ 2 முதல் 12 வாரங்களில் உடலில் மேல் தோள், ரத்த ஓட்டம், சுவாச செயல்பாடுகள் மேம்படும்; நடை எளிதாகும்.

◇ 1 முதல் 9 மாதங்களில் இருமல் குறையும். சைனஸ் இறுக்கம் தளரும்; மூச்சிறைப்பு குறையும்; உடல் சக்தி மேம்படும்; நோய்த்தொற்று குறையும்.

◇ ஓராண்டில் புகைப்பிடிப்பதால் ஏற்படும் இதயக் கோளாறு 50 % குறையும்.

◇ 2 ஆண்டில் பக்கவாதம் ஏற்படுவது குறையும். வாய், தொண்டை, உணவுக் குழாயில் புற்றுநோய் ஏற்படுவது தடுக்கப்படும்.

◇ ஒருவர் புகைப்பிடிப்பதை நிறுத்திவிட்டால் புகைப்பிடித்தவரின் சராசரி ஆயுட்காலம் மீண்டும் கிடைக்கும். புற்று நோயாக மாற வாய்ப்புள்ள செல்கள், இயல்பான செல்களாக மாறும்.

◇ 15 ஆண்டுகளில் புகைப்பிடிப்பதால் ஏற்படும் இதயக் கோளாறு முழுமையாக நீங்கும்.

**மு.சதீஸ்குமார்**
**இணையாசிரியர் தமிழ்த்துறை**

## பெண் சுதந்திரம்

பெண் சுதந்திரமாம்
பிறக்கும் போதே கையில்
கள்ளிப்பாலோடு காத்திருக்கிறார்கள்
தந்தை மற்றும் உறவினர்கள்
நான்கு சுவர்களுக்கு
இடையே கையில் விறகுக்
கட்டையைத்தந்து உன்னை
அடக்கி வைத்தது ஏனோ

அறியவில்லை அவர்கள்
இருட்டின் ஒளியே
வெள்ளை நிறத்தின்
அமங்கலத்தின் குறியீடு
என்கிறார்கள்.
திருமணம் என்ற பெயரில்
அடிமை சாசனத்தில்
கையெழுத்திடாத அடிமைகள்.
அடிமையாக வந்த அவளிடம்
அணுவளவும் இரக்கம் கொள்ளாத
முன்னாள் அடிமை
கேட்டால் பெண்சுதந்திரம் என்கிறார்கள்

**ம.சௌந்தர்யா**
**தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## மறக்க முடியாத சுதந்திரத் தியாகிகள்

சதிக்குக் கால்
முளைத்து சாதி ஆனதோ!
மதத்திற்கு மதம் பிடித்து
மரணம் ஆகின்றதோ?
இதுவா சுதந்திரம்?

சாதியா நம்
ஒருமைப்பாடு?

மதமா நம்

ஒற்றுமை?

உண்மைதான்

நம் பண்பு!

உழைப்புதான்

நம் தெம்பு!

அன்பு ஒன்றுதான்

நம் பிணைப்பு!

நடத்திய போராட்டங்கள்

பசிக்கவே இல்லை !

வாங்கிய தடியடிகள்

வலிக்கவேயில்லை !

சிந்திய ரத்தத்தை

உணரவே இல்லை !

இழந்த வீரர்களை

மறக்கவும் இல்லை !

**பெ.அருணா**

**இரண்டாமாண்டு கணிதம் 'அ'பிரிவு**

## மழை

சாரல் மழையில் நனைந்த காற்று

தென்றலாய்ச் சில்லிடுகிறது!

மழைநீர் கொட்டும் சத்தம்

புதியதொரு இசையமைக்கிறது!

மலர்களெல்லாம் நீரில் நனைந்து

தலையாட்டிப் புன்னகைக்கிறது!

எல்லோர் மனதும்

மழையில் நனையவே

மன்றாடிக் கெஞ்சுகிறது!

பல மைல் தூரம் கடந்துவரும்

இந்த நீர்த்துளிகள்

தேவனின் தீர்த்தமாகவும் இருக்கலாம்!

மேகம்

நீர்த் துளிகளாய்

மண்ணில் எழுதும்

காதல் கவிதை

மழை

**ஆ.பரத்**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'அ'பிரிவு**

## கருவறை

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்

கண்கள் இல்லாமல் ரசித்தேன்

காற்று இல்லாமல் சுவாசித்தேன்

கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன்

என் தாயின் கருவறையில் மட்டும்...!

**P.ஜனப்பிரியா**

**நுண்ணுயிரியல் - முதலாமாண்டு**

## விடியல்

விதைத்ததும் செடியாவதில்லை
விதைகள்
நட்டதும் நிழல் தருவதில்லை
மரங்கள்
கல்லெறிந்தும் வீழ்வதில்லை
கனிகள்
நினைத்ததும் நிறைவேறுவதில்லை.
கனவுகள்
முயன்றதும் கிடைப்பதில்லை
வெற்றிகள்.
நம்பிக்கை கொள் இருளின் முடிவில்
நிச்சயம் உண்டு விடியல்...!

**P.ஜனப்பிரியா**

**நுண்ணுயிரியல் - முதலாமாண்டு**

## சுற்றுச்சூழல்

அருவிக்குச் சென்றேன்

அசுத்தம் கண்டேன்

ஆற்றுக்குச் சென்றேன்

கழிவுநீர் கண்டேன்

இமயம் சென்றேன் உருகும்

பனிநீர் கண்டேன்

ஈயைக் கண்டேன் அதில்

பல நோயைக் கண்டேன்

உலகைச் சுற்றினேன்

பண்பாட்டு கலப்பினைக் கண்டேன்

ஊருக்கு வந்தேன் பிளாஸ்டிக்
எமனைக் கண்டேன்

எனக்குள் பல வியத்தகு

மாற்றம் கண்டேன்

ஏழையைக் கண்டேன் - அவன்

ஏக்கம் உணர்ந்தேன்

ஐயம் கொண்டேன்

சுற்றுச்சூழல் கண்டு

ஒற்றுமை கொண்டால்

எதிர்காலம் உண்டு

ஓய்வின்றி உழைத்தால்

இயற்கையைக் காக்கலாம்...

**மா.மாலினி**

**தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## கல்வி

ஆடிப்பாடி விளையாடுவது என்று இருந்தேன்

அன்று

எழுத்துக்கள், எண்கள் என்று அறிந்தேன்

நேற்று

எழுதுவது படிப்பது என்று தெளிந்தேன்

இன்று

இதைத் தந்தது எதுவோ என்று நினைப்பேன்

நாளை

அதுதான் கல்வி என்று அறிவேன்

முழுவாழ்வில்.

**மா.மாலினி**

**தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## தாய்

பிறக்காத போது

கருவில் சுமப்பாள்

பிறந்த பின்

கையில் சுமப்பாள்

வளரும் போது

தோளில் சுமப்பாள்

வளர்ந்த பின்

இதயத்தில் சுமப்பாள்

இறக்கும் வரை சுமந்துக் கொண்டே

இருப்பாள் அவள்தான் தாய்...

**மா.சௌமியா**

**முதலாமாண்டு - இயற்பியல் 'ஆ' பிரிவு**

## அறிந்து கொள்வோம்

❖உலோகங்களைப் பற்ற வைக்கப் பயன்படுத்தும் வாயு எது?

**விடை** : அசிட்டிலின்.

❖காஸ்மிக் வருடம் என்பது எத்தனை ஆண்டுகளைக் கொண்டது?

**விடை** : 25 கோடி.

❖தட்சிண கங்கை என்று அழைக்கப்படும் நதி எது?

**விடை** : கோதாவரி.

❖நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் விமான நிலையம் எங்குள்ளது?

**விடை** : கொல்கத்தா.

❖இந்தியாவின் 3-வது பெரிய மாநிலம் எது?

**விடை** : மகாராஸ்டிரா.

❖சூரத் நகரம் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?

**விடை** : தபதி.

❖பழனி மலையின் புராண பெயர்?

**விடை** : பொதினி.

❖தொன்மையான சங்கீதம் எது?

**விடை** : கர்நாடக சங்கீதம்.

❖மின்கலங்களில் பயன்படுத்தும் அமிலம் எது?

**விடை :** கந்தக அமிலம்.

❖"தங்க தீபகற்பம்" என்று அழைக்கப்படும் நாடு எது?

**விடை :** தாய்லாந்து.

❖அமெரிக்க நாட்டின் தேசியப் பறவை எது?

**விடை :** கழுகு.

❖நெருப்பு உமிழும் மரங்கள் உள்ள நாடு எது?

**விடை :** மலேசியா.

❖உலகிலேயே வேகமாக வளரும் தாவரம் எது?

**விடை :** மூங்கில்.

❖இரண்டு பிரதமர்கள் கொண்ட நாடு எது?

**விடை :** சான் மரினோ.

❖முதன் முதலாக நோபல் பரிசு வழங்கப்பட்ட ஆண்டு எது?

**விடை :** 1904.

❖பசிபிக் பெருங்கடலில் எத்தனை எரிமலைகள் உள்ளன?

**விடை :** 400 எரிமலைகள்.

❖"வெயில் நிலம்" என அழைக்கப்படும் கண்டம் எது?

**விடை :** ஆப்பிரிக்கா.

❖அமைதி பள்ளத்தாக்கு எங்கு உள்ளது?

**விடை :** கேரளா.

**பு.மு.சரண்யா**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'ஆ'பிரிவு**

## கவிதை

பாசத்தில்

பனியாய் இரு!

சுவாசத்தில்

மலராய் இரு!

பேச்சில்

கவிதையாய் இரு!

நட்பில்

இமயமாய் இரு!

சுறுசுறுப்பில்

எறும்பாய் இரு!

உறுதியில்

இரும்பாய் இரு!

வாழ்நாள் முழுவதும்

சிறப்பாய் இரு!

என்றென்றும்...

**செ.சௌந்தர்யா**

**முதலாமாண்டு - இயற்பியல் 'ஆ'பிரிவு**

## முதியோர் இல்லம்

நேரம் இல்லை

பொழுது போக்கு தளங்களில்

பொழுது போக்கும் மனிதர்களுக்கு

நேரம் இல்லாமல் போகிறது

முதியோர் இல்லத்தில் உள்ள

பெற்றோரைக் காண...!

**ந.தளபதி**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'அ'பிரிவு**

## நட்பு

சூரியனுக்கு எரிக்க மட்டும் தான் தெரியும்

அணைக்கத் தெரியாது...

மழைக்கு அழ மட்டும் தான் தெரியும்

சிரிக்கத் தெரியாது... ஆனால் எனக்கு

என் நண்பனை

அணைக்க மட்டும்தான் தெரியும்

வெறுக்கத் தெரியாது...

**ர.ரவீனா**

**முதலாமாண்டு இயற்பியல் 'ஆ'பிரிவு**

## வாழ்த்துக்கள்

மலர்களில்

மாலை கட்டும் விந்தையை

உன்

கண்களுக்குச் சொல்லி

வைத்த மணமகள்,

எங்கள் மணமகளின்

எண்ணங்களை

மாலைசூடி அணிந்துகொண்டதென்று

வாழையடி வாழையாய்

பூமலரும் சோலையாய்

நல்லதொரு வேளையின்

புதுமனங்கள் சேர்ந்திட

தேவர்களும் வாழ்த்துவர்

வானவரும் வாழ்த்துவர்

மண்ணிலுலகில் வாழ்ந்திடும்

மாந்தர்களும் வாழ்த்துவர்...

**அ.ஶ்ரீலேகா**

**முதலாமாண்டு - இயற்பியல் 'ஆ'பிரிவு**

## அறிவியல் பெயர்கள்

**காய்கறிகளின் அறிவியல் பெயர்கள்**

கத்தரிக்காய் - சொலேனம் மெலஞ்ஜினா

உருளைக்கிழங்கு - சொலேனம் டிபோரோசம்

வெங்காயம் - அல்லியம் சீபா

வெண்டைக்காய் - ஏபல்மாஸ்கஸ் எஸ்குலண்டஸ்

மிளகாய் - கேப்சிகம் ஆன்னுபெம்

சுரைக்காய்- லாகினேரியா சிசரேரியா

**பழங்களின் பெயர்கள்**

மாம்பழம் - மாஞ்சி பெர்ரா இண்டிகா

கொய்யா - சிடியம் குஜாவா

சப்போட்டா - ஏக்ரஸ் சப்போட்டா

பப்பாளி - கேரிக்கா பப்பாயா

**பறவைகளின் பெயர்கள்**

காகம் - கோர்வஸ் கோரோன்

புறா - கோலம் டிடே கொலம்தபி போர்ம்ஸ்

மயில் - பாசாகிறிஸ்டாடஸ்

**P.நித்யா**

**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## அப்பா

பிறந்தது முதல் தன்னை

மார்பிலும் தோளிலும்

தாயை விட

அதிக நாள் சுமப்பவன்

நீ தானே!

எத்தனை யுகங்கள்

கடந்தாலும் - நீ

என் அருகில் இருந்தால் போதும்

வானமும் எனக்கு

சொந்தமாகி விடும்.

உன் விரலைப் பிடித்து

சாலையைக் கடக்கும்

ஒரு நிமிடத்தில் நான்

பிறவிப் பயனை அடைகிறேன்.

மீண்டும் ஒரு பிறவி எடுக்க ஆசை

நீ தந்தையாய்

இருப்பாய் என்றால்

காமம் அற்ற காதலனை

பண்புள்ள பாதுகாவலனாய்

பாசமுள்ள பந்தமாய்

நற்பண்பு உடைய நண்பனாய்

என்றும் கஷ்டப்படுத்தாமல்

தான் அனுபவிக்காத சுகங்கள்

தன் இரத்தம்

அனுபவிக்கட்டும் என்றும்

இது வேண்டும் என்றால்...

மறுக்காமல், முகம் சுளிக்காமல்...

மறு கணமே வந்து நிற்கிறது

என் கண் முன்னால்...

பத்து மாதம் சுமந்தவளின்

பாசத்தை விட – உன் அன்பு

மிகப்பெரியது என நிரூபித்துவிட்டாய்...

மகளின் காவலனாய் - சில நேரத்தில்

சிறந்த தோழனாய் என்றும் அன்புடன்

முழுமையான நம்பிக்கையுடன் தைரியம்

கூறுபவன் நீ தானே...

ஆணுக்கு ஆணாகவும்,

பெண்ணுக்கு பெண்ணாகவும் வளர்த்தாயே

ஊரே உன் வளர்ப்பைக் கண்டு

பொறாமை கொண்டாலும்...

உன் மகளை உள்ளங்கையில் தாங்கினாயே...

யார் என்ன கூறினாலும் என்ன

நான் இருக்கிறேன் உனக்கு உறுதுணையாக

என்று நம்பிக்கை ஊட்டினாயே...

பெண் என்பவள் பெண்ணாக மட்டும்

இருக்கக் கூடாது தேவையென்றால்

ஆணாகவும் மாறலாம் என வளர்த்தாயே...
ஊரே உன் பாசத்தையும் - நீ

தரும் சுதந்திரத்தையும்,

உன் அரவணைப்பையும்

உன் வளர்ப்பையும் கண்டு

மெய் சிலிர்த்து நிற்கிறது...

நீ என் மேல் கொண்ட நம்பிக்கையும்

ஆசையும் என்றும் பொய்யாக

மாறவிடமாட்டேன் அப்பா...

**சு.வி.ஜனனி**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'அ'பிரிவு**

## சூரியகாந்தியும் சூரியனும்

சூரியகாந்தி

நீயும் சூரியனும் நண்பர்களா?

அவன் வரும் போது புன்னகையுடன் இருக்கிறாய்!

அவன் சென்றவுடன் முகம் வாடுகிறாய்!

## மணிமுடி

தோழியே!

நாம் அனைவரும் சூட்டிக்கொண்டோம்

மணிமுடியை அல்ல!

பட்டப் பெயர்களை!

## தாயின் பிரிவில் மகள்

ஈர் ஐந்து திங்களாய் என்னை

ஈன்றவள்! என்னை

தவிக்கவிட்டுச் சென்றாள் என்

இரு நான்கு வயதில்!

## கல்லூரிப்பேருந்து

வெவ்வேறு திசைகளில்

சுற்றித்திரிந்து விட்டு மீண்டும்

தன் கூட்டிற்குள் திரும்பும்

கல்லூரி மாணவர்களின்

கல்லூரிப் பேருந்து !

**ம.நவீனா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## நட்பு

கனவு என்பது கலையும் வரை

இரவு என்பது விடியும் வரை

உறவு என்பது பிரியும் வரை

நட்பு என்பது சாகும் வரை.

## கவிதை

உன் கண்களுக்கு

பொய் சொல்லக் கற்றுக்கொடு!

உன் உதடுகள் பொய்

சொன்னாலும், உன் கண்கள்

அதைக் காட்டிக் கொடுக்கிறது.

**கு.மைதிலி**

**கணிதவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு**

## நட்பு

அறிமுகம் இல்லாமல் வந்தோம்
அடிக்கடி பேசினோம் - உறவுகளுக்கு
மேலும் நாங்கள்
பழகினோம்
காலம் கடந்து சென்றாலும்
என்றும் தொடரும் எங்கள் நட்பு.

**க.பிரேம்குமார்**

**கணிதவியல் முதலாமாண்டு 'அ' பிரிவு**

## கண்ணைக் கவரும் ஆயுதம்

கண்ணைக் கவரும் ஆயுதமாய்

ஏமாறியன!

பள்ளிச் சீருடைகள் !

**ம.நவீனா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**


## நட்பு

ஆயிரம் நட்சத்திரங்கள்
விண்ணில் இருந்தாலும் - அந்த
விண்ணிற்கு அழகு
நிலவுதான்.
ஆயிரம் உறவுகள்
மண்ணில் இருந்தாலும்
நமக்கு அழகு
நட்புதான்....

**சே.நித்தியானந்தம்**

**முதலாமாண்டு கணிதம் ‘அ’ பிரிவு**




NANDHI






கா.யஸ்வந்தினி.
I-B.Sc (Maths)-




G.Reeva
II-BSC(PHY)-'B'